**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் திங்கள்கிழமை

**<u>IA NO.903/2023</u>**

**In**

**<u>O.S No.41/2021</u>**

1) பச்சமுத்து

2) துரையரசன்

3) ராஜம்மாள்

4) பச்சமுத்து உடையார்

5) சுப்ரமணியன் ......**மனுதாரர்கள்/வாதிகள்**

**//எதிர்//**

1) மஞ்சுளா

2) தமிழக அரசுக்காக அதன் பிரதிநிதி

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

புதுக்கோட்டை

3) சார் ஆட்சியர் அவர்கள்,

அறந்தாங்கி.

4) காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள்,

அறந்தாங்கி.

5) வட்டாட்சியர் அவர்கள்,

வட்டாட்சியர் அலுவலகம்,

அறந்தாங்கி.

6) பச்சைமுத்து உடையார் .....**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A,M.சண்முகசுந்தரம் .,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.ராமநாதன்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும்,

1ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.G.கண்ணன்,,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 06 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### <u>1. மனுவின் சுருக்கம்:-</u>

வழக்கு சொத்து புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், சுனையக்காடு கிராமத்தில் உள்ளது. மேற்படி இடம் அனுபோக நத்தமாக இருந்ததால் செட்டில்மெண்ட் நிலஅரவையில் புலஎண்.276 என அளவை செய்யப்பட்டு எவர் ஒருவருக்கும் பட்டா கொடுக்காமல் பொதுவாக வைக்கப்பட்டது. வழக்கு புலஎன சொத்து நத்தம் நிலஅளவையில் புலஎண்.473/24 பரப்பு 0.37.0 ஏர்ஸ் மற்றும் புலஎண்.273/25 பரப்பு 0.02.0 ஏர்ஸ், புலஎண்.273/26 பரப்பு 0.08.5 ஏர்ஸ்) என அளவை செய்யப்பட்டது. அழகப்ப உடையார் மகன் காசி என்கிற பச்சமுத்து உடையார்-1, மருது உடையார் மகன் முத்துச்சாமி உடையார்-2, ந.அழகப்ப உடையார் மகன் பச்சமுத்து உடையார்-3, ப.மு.அழப்ப உடையார் மகன் பச்சமுத்து உடையார்-4, கருப்பையா உடையார் மனைவ பூவாயி அம்மாள்-5 ஆகியோர் பெயரில் பட்டா இருந்தது. மேற்படி 2-வது நபர் முத்துச்சாமி உடையார் மகன் மனுதாரர் ஆவார். மேற்படி 3-வது நபர் பச்சமுத்து உடையார் மனைவி 3-ம் பிரதிவாதி ஆவார். மேற்படி 4-ம் நபர் பச்சமுத்து உடையார் 4-ம் பிரதிவாதி ஆவார். மேற்படி 5-ம் நபர் பூவாயி மகன் 5-ம் வாதி ஆவார். வழக்கு சொத்தானது மனுதாரர்களுக்கு வழிமுறை சொந்தமானது. வழக்கு சொத்தில் முன்னோர்கள் பலதலைமுறைகளாக வீடுகட்டி குடியிருந்து வந்த அனுபோக நத்தம் இடமாகும். கிராம நத்தமாக வகைபாடு செய்யப்பட்ட நிலத்தை பொருத்து அரசுக்கோ அல்லது உள்ளாட்சி அமைப்புக்கோ எவ்வித உரிமையும் இல்லை. எவர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறாரோ அவர் மட்டுமே அந்த சொத்தினை பொருத்து பாத்தியம் கோர இயலும் என மாண்பமை உச்சநீதிமன்றம் பல வழக்குகளி தீர்ப்பளித்தள்ளது. வழக்கு சொத்துக்களில் எங்களது முன்னோர்கள் வெட்டி கல்கட்டப்பட்ட குடிநீர் கிணறு உள்ளது. மேலும் எங்களது முன்னோர்கள் வீடுகட்டி அனுபவித்து வந்த அடித்தளம் அடையாளமாக உள்ளது.

மேலும் வழக்கு சொத்தில் ஒரு வீடும், நான்கு கொட்டகைகளும் வைக்கோல் போரும், குப்பை குழிகளும் உள்ளது. இந்நியையில் மனுதாரர்களுக்கு தனித்தனியாக பட்டா வழங்காமல் நத்தம் நிலவரி திட்டத்தில் கூட்டு பட்டாவில் வைத்துவிட்டனர். ஆனால் மேற்படி கூட்டுப்பட்டா ஏற்பட்டதன் விவரத்தை கிராம கணக்குகளில் போக்குவரத்தும் செய்யாமல் விட்டுவிட்டனர். மேற்படி சொத்து மனுவில் "அ" அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது.இந்நிலையில் வழக்கு "அ" அட்டவணை சொத்தில் 1 ஏர்ஸ் இடத்தை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எவ்வித விசாரணையும் இல்லாமல் 5-ம் பிரதிவாதி நிலப்படை வழங்கியுள்ளார். மேற்படி நிலஒப்படை வழங்கிய சொத்து "ஆ" அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது. எதிர்மனுதார்/1-ம் பிரதிவாதிக்கு நிலஒப்படை வழங்கிய விவரம் 12.12.2020-ம் தேதியில் நாங்கள் வழக்கு சொத்தில்இருந்தபோது எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்திற்கு அவர் பெயரில் பட்டா வந்துவிட்டது என சொல்லி எங்களை வழக்கு சொத்தை விட்டு காலிசெய்ய சொல்லி ஒரு நிலஒப்படை உத்தரவின் புகைப்பட நகலை காட்டினார். பின்பு அந்த நகலை மனுதாரர்களின் முன் வீசி எரிந்தார். அதை எடுத்து பார்த்தபோது தான் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி பெயருக்கு புலஎண்.473/81 பரப்பு 1 ஏர்ஸ்க்கு நிலஒப்படை வழங்கப்பட்டுள்ள விபரம் தெரியவந்தது. மேற்படி நத்தம் புலஎண்.473/81-ன் படி எதிர்மனுதார்/1-ம் பிரதிவாதிக்கு வட்டாட்சியரால் நிலஒப்படைப்படி பட்டா வழங்கப்பட்ட விபரம் எங்களுக்கு தெரியவந்தது. அதன்பின் நான் 16.12.2020-ம் தேதி மாவட்ட ஆட்சியரிடம் எங்களின் பாகப்படி பட்டா கேட்டு மனுக்கொடுத்திருந்தேன். மேற்படி மனுவை பெற்றுக்கொண்ட 2-ம் பிரதிவாதி அதனை 3-ம் பிரதிவாதிக்கு நடவடிக்கை எடுக்க ஓ.மு. 24730/2020/45 நாள்.22.01.2021- படி அனுப்பி வைத்துள்ளார். அதன்பேரில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்பின்பு மாண்பமை நிமன்றத்தில் மனுதாரரும் மற்ற வாதிகளும் சேர்ந்து ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள். இந்நிலையில் வழக்கு புலஎண்.473/24 பரப்பு 0.37.0 ஏர்ஸ் மற்றும் 473/25 பரப்பு 0.02.0 ஏர்ஸ் 473/26 பரப்பு 0.08.5 ஏர்ஸ் இடத்தையும் சேர்த்து அரசுப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஒப்படைப்பதற்கு 5-ம் மனுதாரர் ஆய்வு மேற்கொண்டார். அதன்பின்பு மேற்படி சொதுக்கள் மனுதாரர்களது அனுபோகம் நத்தம் அதில் அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதற்காக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிரையில் WP(MD)No.4488 and W.P.(MD)No.4219 of 2023 என்ற மனு கோப்பில் எடுக்கப்பட்டு மேற்படி விவகாரம் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டது என்பதால் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த OS.No.41/2021 வழக்கை 12 மாத காலத்திற்குள் நடத்தி பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி வழக்கில் எழுத்தர் பிழையாக புலஎண்.473/25 பரப்பு 0.02.0 ஏர்ஸ், புலஎண்.473/26 பரப்பு 0.08.5 ஏர்ஸ் இடங்களும் சேர்க்கப்படாமல் விடுபட்டுவிட்டது. அதனை மனுவில் கண்டுள்ள விவரப்படிக்கு வழக்குரையில் உள்ள சொத்துவிபரத்திலும் மற்றும் I.A.471/21 நீதிமன்ற ஆணையர் நியமிக்க கொடுத்த மனுவிலும் உள்ள சொத்துவிபரத்திலும் திருத்தம் செய்துகொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்கள்/வாதிகள் இவ்வழக்கில் எந்தவொரு இடத்திலும் தற்போது வழக்கிலும், மனுவிலும் சேர்க்கப்பட வேண்டியதாக மனு செய்துள்ள புலஎண் 473/25 விஸ்தீரணம் 0.02.0 ஏர்ஸ் மற்றும் புலஎண் 473/6 விஸ்தீரணம் 0.080 ஏர்ஸ் இடத்தை பொறுத்து, தனக்கு பாத்தியப்பட்டதாகவோ அதை அனுபவித்து வந்ததாகவோ யாதொரு சங்கதியும் சொல்லப்படாத நிலையில் தற்போது எழுத்தர் பிழை காரணமாக மேற்படி புலஎண் 473/25 விஸ்தீரணம் 0.02.0 ஏர்ஸ் மற்றும் புலஎண் 473/6 விஸ்தீரணம் 0.08.0 ஏர்ஸ் இடமும் சேர்க்கப்படாமல் விடுபட்டுபோனதாக சொல்லியுள்ளது தவறு. மனுதார்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையானது உரிமை விளம்பல் மற்றும் தடையாணை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ள நிலையில் வழக்கில் புதிதாக சேர்க்கப்படும் புலஎண்கள், விஸ்தீரணத்தை பொறுத்து யாதொரு சங்கதியும் வழக்குரையில் சொல்லப்படவில்லை. சொத்து விஸ்தீரணத்தை பொறுத்து எழுத்தர் காரணமாக விடுபட்டுபோய்விட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் வழக்கின் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு மட்டும் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனபதிலிருந்தே மனுதார்கள்/வாதிகளின் மனு நல்ல எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டதல்ல என்பது தெளிவாகிறது. வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு ஏற்பட்ட நிகழ்வுகளை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் புகுத்திடும் எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார்கள்/வாதிகள் தனது மனுவில் சொல்லியுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P (MD) No. 4488 of 2023 and W.P (MD) No: 4219 of 2023 உத்தரவில் இவ்வழக்கை 12 காலத்திற்குள் நடத்தி பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர்கள் வாதிகள் மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி வழக்கை நடத்துவதற்கு தயராக இல்லாத காரணத்தினாலும்,

இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் தற்போது இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர்களின் இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இம்மனுவானது மனுதாரர் வாதி தரப்பில் தாவா சொத்து விபரத்திலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கொடுத்த மனுவிலும் திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் எழுத்துப்பிழையாக புல எண். 473/25 பரப்பு 0.02.0 ஏர்ஸ், புல எண். 473/26 பரப்பு 0.08.5 ஏர்ஸ் இடங்கள் சேர்க்கமுடியாமல் போய்விட்டது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. 2 முதல் 5 எதிர்மனுதுாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

வழக்கானது தற்போது விசாரணை ஆரம்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. தாவா வழக்கு மனுதாரர்கள் / வாதிகளால் உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தற்போது திருத்தம் கோரும் சொத்து விபர திருத்தத்தை அனுமதிப்பது வழக்கின் தன்மையை எந்தவிதத்திலும் பாதிக்கத்தக்கது இல்லை. இதனால் எதிர்மனுதாரர்களுக்கு குந்தகம் ஏதுவும் ஏற்பட்போவதில்லை. இருப்பினும் மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தை கருத்தற்கொண்டு இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.500/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி செலவுத்தொகையை புதுக்கோட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு முன்பாக எதிர்வரும் 23.10.2024 க்குள் செலுத்தி வைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY
Digitally signed by V SIVAGAMASUNDARY
Date: 2024.10.01 23:34:26 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 903/2023**
**O.S.No. 41/2021**
**நாள். 30.09.2024**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**